மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விழுப்புரம் நகரின் தெற்கில் திருச்சிராப்பள்ளி தேசிய நெடுஞ்சாலையில் பூந்தோட்டம் கிராமம் புல எண் 219-ல் 6.25.0 ஹெக்டேர் அரசு ஏரி புறம்போக்கு நிலத்தை நீண்டகால குத்தகை அடிப்படையில் விழுப்புரம் நகராட்சி பெற்றிருக்கிறது. அதிலே பேருந்து நிலையத்திற்குத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. விரைவில் வேலை முடிக்கப்படும்.

மேட்டூர் கால்வாய்களைப் புதுப்பித்தல்.

*5909—**திரு. க. பழனிசாமி :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டூர் இடதுகரை, வலதுகரை கால்வாய்களைப் புதுப்பிக்க, தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, பராமரிக்க மற்றும் பழுதுபார்க்க வருடந்தோறும் அரசினால் ஒதுக்கப்படும் நிதிநிலைக்குத் தக்கவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு செய்து முடிக்கப்பட்டு வருகின்றன.

சபரி அணையைப் புதுப்பிக்கும் திட்டம்.

*9288—**திரு. கே. சுப்பிரமணியப்பிள்ளை :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அருகே பழையாற்றின் குறுக்கே உள்ள சபரி அணை தற்சமயம் பழுது ஏற்பட்டு கசிவு ஏற்பட்டுள்ளதால் இந்த அணையை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) சபரி அணையில் கசிவுகள் அடைக்கும் பணிகள் பராமரிப்புப் பணியின் கீழ் தற்போது செய்யப்பட்டுள்ளன. இவ்வணையை மேம்படுத்தும் பணிகள் தேசிய நீர் மேலாண்மை

1991 சனவரி 23]

மேம்பாட்டுத் திட்டமான கோதையாறு திட்டத்தின் கீழ் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) சபரி அணையை மேம்படுத்தும் பணிகள் வருகிற கால அடைப்பு காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த அணையினுடைய கசிவைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது ஏற்பட்டிருக்கிற அந்தக் கசிவின் காரணமாக ஏராளமான நீர் விரயமாகி, வறட்சிக் காலத்தில் மக்களுக்குத் தேவையான நீர் இல்லாத நிலைமையைக் கருத்திற் கொண்டு, உடனடியாக இந்த ஆண்டிலேயே அந்தப் பணியைப் பூர்த்தி செய்து, கசிவை நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அதிலே கசிவு ஏற்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான், தற்போது உடனடியாக அதனுடைய பராமரிப்புப் பணியின் கீழ் அது பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. நிரந்தரமாக அதனுடைய கசிவைத் தடுக்கும் பொருட்டு, grouting and raising the flood banks என்ற முறையில் அந்த இரண்டையும் செய்வதற்குத் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் மதிப்பீடு தயாரித்திருக்கிறோம். ரூ. 3.7 இலட்சம் செலவில் அந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நீர் அந்த அணையில் இருக்கிற காரணத்தால் இப்போது பணி செய்ய முடியாது. நீர் வற்றியவுடன் அந்த பணி மேற்கொள்ளப்படும்.

வணிகர் நல வாரியம் அமைத்தல்.

***230—திரு. பெ. சு. திருவேங்கடம் :**

திரு. எஸ். டி. உகம்சந்த் மற்றும்
டாக்டர் ச. சுந்தரராஜ் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வணிகர் நல வாரியம் ஒன்று அமைக்க வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.